2010 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் காலையிலே என்னிடம் சொல்லியிருந்தால் அமைச்சரிடம் நான் தகவல் சொல்லி, அவர் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) எங்கே கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) எனக்கு வரவில்லை. காலையில் வந்து நீங்கள் சொல்லி இருக்கலாமே? இனியாவது அது மாதிரி செய்யுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கு ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல இந்தத் தகவல் முறையாக எனக்கு வரவில்லை என்று சொன்னாலும், அவர் சொன்ன அந்த உணர்வோடு நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து, அது மாண்புமிகு உறுப்பினருக்கு பிறகு விளக்கமாக அறிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

(ஆ) பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

முற்பகல் 10–10

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகவே சொல்கிறேன். இன்றையதினம் தமிழகத்திலே +2 மாணவர்களுக்கானத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கின்றன. நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளுடைய முதல்வர்கள் மற்றும் தாளாளர்களுடைய கூட்டத்தில் பேசுகின்றபோது, பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான மதிப்பெண்களைக் குறைப்பதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்கிற தகவலை

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 மே 13

வெளியிட்டிருக்கிறார்கள். இது மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் ஒரு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த மதிப்பெண்களைக் குறைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு இருக்குமென்று சொன்னால், அதை விரைவாக அறிவித்தால், அந்த மாணவர்கள் தங்களது எதிர்கால படிப்பைப்பற்றித் திட்டமிடுவதற்கும், பெற்றோர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்கிற காரணத்தினால், அதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எப்பொழுது அறிவிக்க இருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கல்லூரி தாளாளர்கள் மற்றும் முதல்வர்களுடைய கூட்டத்தில் கிட்டத்தட்ட ஒட்டுமொத்தமாக, ஒரேவிதமான கருத்தாக அவர்கள் கேட்டுக்கொண்டதெல்லாம், 548 தனியார் பொறியியல் கல்லூரிகள் இருக்கிற நேரத்தில், சென்ற ஆண்டு கலந்தாய்வில் மட்டும் 30,581 இடங்கள் காலியாக இருக்கிற சூழ்நிலையில், புதுவையிலே, கர்நாடகாவிலே, ஆந்திராவிலே குறைந்தபட்ச மதிப்பெண்கள் இருப்பதைப்போல, இங்கே இருக்கிற நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் இருப்பதைப்போல, மற்ற கல்லூரிகளுக்கும் சேர்க்கைக்கான மதிப்பெண்களைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி அதைப்பற்றி முடிவு அறிவிப்பதாகக் கூறியிருந்தேன். அவர்கள் mere pass என்று தகுதியை நிர்ணயிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். நமது மாநில Deemed Universities–லே அல்லது புதுவையிலே எப்படி இருக்கிறதோ, அதைப்போல pass பண்ணினாலே அவர்களுக்கு admission கொடுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருந்தார்கள். அதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், இப்பொழுது O.C.–க்கு 55 மார்க்குகள் வேண்டும், B.C.–க்கு 50 மார்க்குகள் வேண்டும், M.B.C.–க்கு 45 மார்க்குகள் வேண்டும். இவற்றை ஓரளவுக்குக் குறைப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் கலைஞர்

2010 மே 13] [டாக்டர் க. பொன்முடி]

அவர்களோடு கலந்து பேசி, நாளை தேர்வு முடிவுகள் வந்த பிறகு, ஒரு வாரத்திற்குள்ளாக அதற்கான முடிவுகளை அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

(இ) மூடப்பட்ட மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலைத் தொழிலாளர்களுக்குப் பணப் பயன் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் பிறந்து தன்னுடைய அயராத உழைப்பால், ஈடு இணையற்ற சேவையால் பொது வாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, இதுவரையில் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகி, அரசியல் பண்பாட்டைக் காத்து, நாகரிகத்தை மேலோங்கச் செய்து எல்லா நிலைகளிலும் எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பணி தொடர, தமிழ்நாட்டு மக்களுக்கு, மொழி, இனம் காத்து, இந்த மண் செழிக்க, அவர்கள் நீண்ட நாள் வாழ பா.ம.க. சார்பில் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், நான் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்து நீண்ட நாட்களாகின்ற பிரச்சினை, மேட்டூரில் பிரசித்தி பெற்ற Mettur Textile Mills என்ற மில் மூடப்பட்டு, அந்த மில் திறக்கப்படாததால் 3,000 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இந்த மில் திறக்கப்படவில்லை என்ற சூழ்நிலை இருந்தாலும்கூட, அதில் பணியாற்றிய தொழிலாளர்களில் சிலர் இறந்துவிட்டார்கள், சிலர் ஊரைக் காலி செய்து வெளியூருக்குச் சென்ற நிலையில் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, ராஜபாளையம், சத்திரப்பட்டி போன்ற ஊர்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஒன்றுதான் கேட்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒன்றுதான்

கேட்கலாம். (குறுக்கீடு) நீங்கள் ஒரு issue—வைச் சொல்லி விட்டீர்களென்றால், அவ்வளவுதான். முடிந்துவிட்டது, உட்காருங்கள். அடுத்து, செல்வி பாலபாரதி, சொல்லுங்கள்.

(ஆ) பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைத்தல்—*தொடர்ச்சி*

*செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்களைச் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு issue மட்டும்தான்.*

செல்வி கே. பாலபாரதி: *ஒன்றுதான் என்றால், ஏற்கெனவே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. அப்படியென்றால், உட்காருங்கள். (குறுக்கீடு)*

செல்வி கே. பாலபாரதி: *இல்லை, இல்லை. அதிலே மாற்றுக் கருத்து இருக்கிறது. ஏனென்றால், எல்லோருமே பொறியியல் கல்விக்காகப் போய்விட்டால், தமிழகத்தில் வரலாறு, அறிவியல், வணிகவியல், பொருளாதாரம் போன்றவற்றிற்கு மாணவர்கள் சேர்க்கை என்பது குறைந்து கொண்டேயிருக்கிறது. ஒரு பாடப் பிரிவிற்கு மட்டும் இவ்வாறு பரிசீலிப்பது என்பது பொருத்தமாக இருக்காது. எல்லாப் பாடப் பிரிவுகளுக்கும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே இருக்கக்கூடிய முறை தொடர்வது என்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.*

(ஈ) ராஜபாளையம், சத்திரப்பட்டி, மருத்துவத்திற்குப் பயன்படும் துணி நெய்யும் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

*செல்வி கே. பாலபாரதி:** *விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், சத்திரப்பட்டியில் 10,000—க்கும் மேற்பட்ட தொழிலாளிகள், காயத் துணி உட்பட, மருத்துவத்திற்குப் பயன்படுத்தக்கூடிய துணிகளை நெய்யக்கூடிய தொழிலாளிகள் காலவரையற்ற வேலைநிறுத்தம்*

செய்துகொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனம் செலுத்தி பேச்சுவார்த்தைமூலம் ஒரு சுமுகமான முடிவைக் கொண்டுவருவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–15

(ஆ) பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைத்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் சொல்லி முடிக்கட்டும்.*

திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.* Cut off mark *மார்க் பற்றிய விஷயங்களைச் சொன்னார்கள். அந்த விஷயங்களில் அவர் சொன்னது சரியாக்கப்படும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்துபேசி ஒரு முடிவினை அறிவிப்பது என்பது தமிழ்நாடு மாணவர்கள் பயன்பெறுவதற்குரிய வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே இதுகுறித்து தெளிவான கருத்தை அவர் சொல்வதற்குத் தயாராக இருக்கிற காரணத்தினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினால், இந்த மதிப்பெண் குறித்து மறு ஆய்வு செய்வது என்பது தேவையான ஒன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.*

(உ) டெல்லியில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளைக் காரணம் காட்டி குடியிருப்புகளைவிட்டு வெளியேற்றப்பட்ட தமிழர்களுக்கு மாற்று இடம் வழங்குதல்

திரு. வை. சிவபுண்ணியம்: *டில்லியிலே காமென்வெல்த் போட்டிகள் நடைபெற இருப்பதைக் காரணம் காட்டி, 400 தமிழர்களின் குடியிருப்புகள் அங்கே காலி செய்யப்பட்டு, அவர்களுக்கு மாற்று இடம் இல்லாமல் இருக்கிறார்கள். எங்களது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. லிங்கம் அவர்கள்கூட*

[திரு. வை. சிவபுண்ணியம்] [2010 மே 13

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபற்றி நமது தமிழக அரசு ஏதாவது முயற்சிகள் எடுத்து அவர்களுக்குரிய மாற்று இடத்தினை ஏற்பாடு செய்வதற்கு முயற்சித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(ஆ) பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைத்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் நேற்று இதுபற்றிக் கேட்டபோது செய்யலாம் என்று சொன்னார். திரு. சிவபுண்ணியம் அவர்களும் உடன் இருந்தார்கள். செல்வி பாலபாரதி சொன்னது, arts and science college-ல் உள்ள இடங்கள் மாறக்கூடாது என்று சொன்னார்கள். இப்போது அந்தப் பிரச்சினையில்லை. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற 67 கல்லூரிகளிலுமே இரண்டு ஷிப்டுகள் கொண்டு வரப்பட்டு எல்லா கல்லூரிகளிலுமே இடமில்லை என்கிற சூழ்நிலைதான் இருக்கிறது. எந்தக் கல்லூரியிலும் இடங்கள் காலியாக இல்லை. இது ஒன்று. ஆகவே, அந்தப் பாடங்களில் சேருவதற்கான மாணவர்களும் இருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் Backward Class வகைப்பாட்டில் மட்டும் 8,133 இடங்கள் காலியாக இருந்தன. M.B.C.–யில் 6,755 இடங்கள் காலியாக இருந்தன. S.C.–யில் 6,556 இடங்கள் காலியாக இருந்தன. ஆக, பொறியியல் படிக்க விரும்புகிற மாணவர்களுக்கு தகுதி மதிப்பெண்கள் குறைக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கை. ஏனென்றால், S.C. வகுப்பினருக்கு இப்போது 35 மதிப்பெண்கள்தான் இருக்கிறது. அதை மற்ற மாணவர்களுக்கு விரிவுபடுத்துவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. மற்ற மாநிலங்களில் பார்த்தாலும், கேரளாவில்கூட 35 மதிப்பெண்கள்தான்; மேற்கு வங்காளத்திலும் 35 மதிப்பெண்கள்தான். Pass செய்தால் போதும் என்றுதான்

2010 மே 13] [டாக்டர் க. பொன்முடி]

இருக்கிறது, பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே. மற்ற மாநிலங்களில் எல்லாம் அதுபோன்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய கோரிக்கையை நாம் அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், ஓரளவிற்காவது அதுகுறித்துக் கலந்துபேசி கிராமப்புறங்களிலே இருக்கிற மாணவர்களுக்குப் பயன்படுகிற வகையிலே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

(ஊ) ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளி நளினியை சிறையில் விஷம் வைத்துக் கொல்லப்போவதாக வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாட்களிலும், நேற்று மாலை செய்தித்தாட்களிலும் வேலூர் மத்திய பெண்கள் சிறையில் இருக்கக்கூடிய ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளி நளினி அவர்களுக்கு, சிறைத் துறை அதிகாரிகள் விஷம் வைத்துக் கொல்லப் பார்க்கிறார்கள் என்று அவர் புகார் அளித்தது பெரும் பரப்பரப்பாக எல்லா இடங்களிலும் செய்தியாக வந்துகொண்டிருக்கிறது. மனிதாபிமானம் இல்லாமல் எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொல்வது வேண்டுமானால், அவர்களது பண்பாக இருக்கலாமேயொழிய, இங்கே மனித நேயத்திற்கு உதாரணமாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிறைத் துறை அதிகாரிகள், அவருக்கு விஷம் வைத்துக் கொன்றால், அவர்கள் அல்லவா குற்றவாளிகளாகிவிடுவார்கள்? இப்படி பொய்யான பிரச்சாரத்திற்கு இவ்வளவு விளம்பரம் வந்து கொண்டிருக்கிறதே, சிறைத் துறையில் ஏன் இப்படிப்பட்ட கசிவுகள் வெளியாவதற்கான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது? இது உண்மைதானா என்று அவைக்கு அறிவிக்குமாறு மாண்புமிகு சிறைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .